1991 செப்டம்பர் 19]

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

97. மேற்கு வங்க அரசுக்கு தமிழக அரசினால் விற்கப்பட்ட ஒரு சேடக் ஹெலிக்காப்டருக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—1—1991-ஆம் நாளிட்ட 2-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

98. மதுரை, திருவாளர்கள் ருக்மணி மில்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 28—5—90 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2–1–91 ஆம் நாளிட்ட 6-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

99. திருச்சி, திருவாளர்கள் சதர்ன் ஹைட்ரோ கார்ப்பன்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை ஜூன் 1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—1—1991-ஆம் நாளிட்ட 7-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

100. கோவை, சிங்கநல்லூர், திருவாளர்கள் லாயல் மெசின் ஒர்க்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை நவம்பர் 1989 முதல் அக்டோபர் 1992 வரை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—3—1991-ஆம் நாளிட்ட 177-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

101. மேட்டூர் டேம், திருவாளர்கள் மேட்டூர் டெக்ஸ் டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 24—10—1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப்போடுவது குறித்து 27—3—1991-ஆம் நாளிட்ட 178-ஆம் எண் அரசாணையில்வெளியிடப்பட்டஅறிவிக்கை தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

102. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948-ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகித்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

103. மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

69. கோரிக்கை எண். 24—பெருந்தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

70. சமூக நலத் துறை குறித்த செயல் திறன் குறிப்பு, 1991-92 (ஆங்கிலம்).

71. பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991-92.

72. பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991-92.